20

உ

ஸர்வம் சிவமயம்.

சுவர்ணபுரி என்னும் கூகையூர்

சித்ததாதசுவாமிகளின்

# திருப்பதிகங்களும் திவ்ய சரிதமும்.

இஃது

பசும்பலூர்

சி. முத்துசாமி உபாத்தியாயரவர்கள்

கூகையூர்

மேலமடம் சு. சித்ததாதய்யரவர்கள்

பொருளுதவியால்

சிதம்பரம்

ஸ்ரீகுஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

...ப்பிக்கப்பட்டது.

...—1915. [அணா 1.

Q28'.4198 W
N15
178238

உ

சிவமயம்.

கூகையூர்

# ஸ்ரீமத் சித்தநாதசுவாமிகள்

# தோத்திரப்பா.

இஃது

கச்சிக்குமரகோட்டப்பிள்ளைத் தமிழ்பாடியருளிய
(அரன்வாயல்) மகாவித்துவான் சித்தாந்தரத்னகாம்

## வேங்கடசுப்புப்பிள்ளையவர்கள்

இயற்றியதை

பசும்பலூர்

## சி. முத்துசாமி உபாத்தியாயரவர்களால்

கூகையூர்

## மேலமடம் சு. சித்தநாதய்யரவர்கள்

பொருளுதவியால்

சிதம்பரம்

ஸ்ரீகுஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.



உ

சிவமயம்.

# சித்தநாதர் பதிகம்.

## காப்பு.

### வெண்பா.

தெண்ணீர் சுவேதநதி தீரத் தொளிர்குகையூ
ருண்ணீடு கோயி லுறைசித்தர்—தண்ணீர்மைத்
தாட்டா மரைபாடத் தான்மகிழ்ந்தே யோர்பிறை
கோட்டானை யென்றுணையா கும். [வெண்

கனவிடத்து நின்னுருவங் காட்டினையந் நாணீ
நனவிடத்துங் காட்டினையிந் நாளே—யெனையவருள்
கையா மலகமொக்குங் கண்டாய் குகையூர்வாழ்
ஐயா வெலாம்வலசித் தா.

# சித்தநாதர் பதிகம்.

## நூல்.

### ஆசிரிய விருத்தம்.

சீரார் கைலை மலைநீங்கித்
தென்னா டுய்யத் திருவுளங்கொண்
டோரார் தருமா னிடவுருவ
மியைந்து மண்மேற் போந்தருளித்
தாரார் மார்பன் மாலாங்கன்
றன்னைத்தடுத்தாண் டெழிற்குகையூ
ரூரா யமர்ந்த சித்தனுக்கென்
னுளங்கா ணிக்கை யளித்தேனே. (க)

அளித்தே னுளங்கா ணிக்கையென
வணியார் குகையூர்ச் சித்தனுக்கே
சுளித்தேன் பிறவித் துன்பனைத்துஞ்
சுளித்த வாறே துதித்தவனைக்
களித்தேன் சித்தித் துறையாவுங்
காண்பேன் கண்டாங் கவனருளால்
ஒளித்தே யென்னை மறந்திருப்பே
னுலகிற் பிறவே னிறவேனே. (உ)

இறவாக் கல்வி கற்பதுவே
யெண்ணும் போது பெறலவற்றுட்
சிறவா நிற்ப தெனவறிஞர்
செப்பு மினிய மொழிகேட்டு
மறவா நின்ற வையகத்தோர்
மறதி யொழிப்போன் றிருக்குகையூர்
அறவாச் சிரமச் சித்தர்பிரான்
றுணைத்தாண் மலரென் வான்றுணையே. (௩)

துணையே யடியார்க் ககம்புறமுஞ்
சூழ்ந்தோர் கணமு மெனைப்பிரியா
தணையா நிற்குஞ் சித்தர்பிரான்
அமர்ந்தான் குகையூ ரென்பதெண்ணிற்
றிணையா ருயிரு ளிடங்குகையாற்
சேர்ந்த மாக்ஷி தெரிப்பதுவாம்
உணையா நெற்றி யெனிநெஞ்சே
யுன்னி லவனைக் காண்பதுண்டே. (௪)

உண்டா ரருளி னமுதமகிழ்ந்
துறக்க நீத்து விழித்திருந்து

கண்டா ருன்னைக் கண்டுமுத்திக்
கரைசேர்ந் துயர்ந்தார் மெய்யடியார்
தொண்டா வுன்னை யுன்பெருஞ்சீர்
சொல்வான் குறிக்கொள் வதுமெவனோ
பண்டா கியவென் றலைப்பயனோ
பகராய் சித்தர் பெருமானே. (௫)

பெருமா னீயே நின்புகழைப்
பேசுஞ்சிறியே னினக்கடியேன்
இருமா வினைக்குட் சிக்கினே
னெய்த்தேன் சித்தி யெய்தலென்றோ
கருமா லுலக வாதனைகள்
கழன்ற முத்தற் கினியோனே
அருமா றுறுஞ்சீர்க் குகையூருள்
அமர்ந்த சித்த குருமணியே. (௬)

மணியே யெனநீ யொளிர்கின்றாய்
வறியேன் மனத்து முடிமீதும்
அணியே னணியாத் துலகவல்லல்
அனைத்துஞ் சுமந்துத் தளர்ந்தெய்த்தேன்.

பிணியே நீங்கி யுயுநெறியைப்
பேசல் வேண்டும் நின்புகழைக்
குணியே வளஞ்சீர்க் குகையூருள்
குலவுஞ் சித்த கோமானே. (எ)

கோமா னொளிர்மா லாங்கனெஞ்சுங்
குளிர்தான் மருவுஞ் சினகரமும்
நீமா னுறுநல் வசதியென
நினைந்தாங் கமர்ந்தா யென்னினுமே
யாமா றெய்த முபலெனக்கே
யருளத் தக்க தருளவன்றோ
பாமா லிகைநீ விழைந்த விதம்
பகராய் சித்த சிகாமணியே. (அ)

சிகர மாதி யைந்தெழுத்திற்
சிறக்குஞ் சிவனே டிரண்டறவே
தகர ஞானந் தான்கலந்த
தழைக்குஞ் சுத்த வீரசைவம்
பகர வந்தா யடித்தொண்டர்
பலரை யாண்டாய் குகையூர்வாழ்

அகர வுயிர்போற் றமைந்தாயேற்
கருள்வாய் சித்த நாயகமே. (௯)

நாதா சுவேத நதிக்கரையே
னண்ணுங் குகையூர் கோயில்கொண்ட
நீதா சித்தி யொடுமுத்தி
நெறியின் பயன்கைக் கொண்டவருட்
போதா பஞ்சாக் கரேசரொடு
புணர்ந்த வின்பத் திருவாளா
மேதா வியர்சூழ் சித்தேச
விளங்கித் தழைக நின்சீரே. (௰)

முற்றும்.

உ

சிவமயம்.

கூகையூர்

# ஸ்ரீமத் சித்ததாதசுவாமிகள்

# திருவிருத்தம்.

இஃது

சாத்துக்குடல் என்னும் சப்தகூடல் பதியினராகிய
வீரசைவகுலதிலக வித்துவான்

## வைத்திலிங்கஅய்யர் அவர்களால்

இயற்றியதை

பசும்பலூர்

சி. முத்துசாமி உபாத்தியாயரவர்களால்

கூகையூர்

மேலமடம் சு. சித்ததாதய்யரவர்கள்

பொருளுதவியால்

சிதம்பரம்

ஸ்ரீகுஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

உ

சிவமயம்.

குகையூர்

# சித்தநாதர் பதிகம்.

## ஆசிரிய விருத்தம்.

சித்தர்கட் கரசே செங்கம லத்தின்
திகழ்கரு ணாகரத் தேனே
தேவர்கந் திருவர் முனிவர்சா ரணர்கள்
ஜெயஜெயென் றனுதினம் போற்ற
பத்தியாற் பணியு மடியவர்க் கமுதே
பரஞ்சுடர் ஞானசூ ரியனே
பைம்பொன்மா மலையே முதன்மலை யனைத்தும்
பரிவுட னுதவியே விஜய
நித்திய ஞான வனுமய சகள
நிட்கள நிரஞ்சன நிமல

நிர்மல வமல சொரூபவா னந்த
நிறைபரப் பிர்ம்மமாய் நினைக்குஞ்
சித்தம தொளிருஞ் சோதியே கடல்போற்
றிரையெறி சுவேதமா நதிசூழ்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
சித்தநா தாந்தமே சிகனே. (க)

வெள்ளிமா மலையுந் திகழ்பயோ ததியும்
விளங்கிடு சரோருகா சனமும்
விருப்பிலா தகிலந் தனிற்சம்புத் தீவில்
மேன்மையாந் தெட்சண திசையில்
வள்ளியோர் மருவு பரதகண் டத்தில்
மகதநா டதனின்மா மலையும்
மாப்பலாத் தாழை தேங்குலைங் கமுகு
மகிழகில் சந்தன முல்லை
துள்ளியே சேல்க ளுலாவிடு மடுக்கள்
சுடர்மதிற் கோபரம் நிறைந்த
சுடர்விடு குகையூர் தெக்ஷணா மூர்த்த
ஸ்வரூபரா யமர்ந்தடி யார்க்குக்

தெள்ளிய வமுதே தென்கடல் கிழிக்குந்
 தெளிபுனற் சுவேதமா நதிசூழ்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
 சித்தநா தாந்தமே சிகனே. (உ)

அருவகைப் பொருளா யவற்றுரு கிரியை
 யனைத்துமா யல்லவு மாகி
அஷ்டமா சித்தி தன்னைமா ணைக்கர்க்
 கருளிய வற்புத வுருவாய்ப்
பொருடரு முருவாய்க் ககனமு முலாவிப்
 புண்ணிய தீர்த்தங்க ளாடிப்
போதரு ணெறியில் நிவாநதிச் சிலையிற்
 புகழ்பெறு பற்றுகம் யோகம்
மருவிமா லாங்கன் றனையில்வாழ்க் கையினில்
 வைத்தருள் பார்வையாங் கருளி
வையக மதனிற் பக்குவர்க் கருளி
 மாதவக் குருபர னாக்கித்
தெருளுற வூழி யொருகண மாகத்
 தெளிபுனற் சுவேதமா நதிசூழ்

திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
சித்தநா தாந்தவே சிகனே. (ரு)

நரைத்தகூன் முதியாட் காண்டிரண் டெட்டால்
நங்கையா யில்லறை மியற்றி
நவிற்றியெண் டிசையும் பஞ்சசா சனமும்
நவில்சிவ லிங்கவெண் பூதி
உருத்திராக் கமமுங் காஷாயமும் பஞ்சா
க்ஷரத்துட னுதவியே யுண்மை
யுணர்ந்திடும் வீர சைவா சார
வுயர்குரு பீடமா யமைத்து
தருக்கருச் சித்த நாதநா மத்தை
தரித்திடும் பரம்பரை யாக
சகலசித் தாந்த வாகம முணர்ந்த
சாற்றிய தயாநிதிக் குன்றே
திரைகட லகடு கீண்டிடக் கிழிக்குந்
தெளிபுனற் சுவேதமா நதிசூழ்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
சித்தநா தாந்தவே சிகனே. (சு)

வேண்டிய வுருவ மெடுத்திடுஞ் சித்தர்
விளங்கிய திகம்பரச் சித்தர்
மெய்யெலாம் பூதி யணிந்திடுஞ் சித்தர்
விரிபசும் பொற்சடைச் சித்தர்
காண்டிடு முடைக்கீழ் கோவணச் சித்தர்
கையில்பொற் பிரம்புடைச் சித்தர்
கவினுரு பூதி யையுடைச் சித்தர்
கற்றுகிற் போர்வைகொள் சித்தர்
தூண்டிடு விளக்கின் மேனிகொள் சித்தர்
தூயபொற் பாதுகைச் சித்தர்
சுடர்விடு முடைக்கீழ் கோவண முடுத்து
தூயபொற் பிரம்புவெண் ணீறும்
தேண்டினற் கருள்வீ டளித்திடுஞ் சித்தர்
தெளிபுனற் சுவேதமா நதிசூழ்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
சித்தநா தாந்ததே சிகனே. (ரு)

விண்ணினை யளக்குந் தேங்குதாழ்ந் திளநீர்
விருப்பினு லளித்திட மேகம்

மென்புன லளிக்க வங்கிவந் திருளை
விலக்கிட வானமு தளிக்க
கண்ணினாற் கண்டோ ரிங்கிருந் தனர்யான்
கண்டன னங்கெனக் களிக்க
கண்ணிலா தவற்குங் கூனனே யினர்க்குங்
காக்ஷியாற் பூதியா னீக்கிப்
பெண்ணினின் மூத்தாட் கிளமையே யநல்கிப்
பெட்புறு கணவற்கு மீய்ந்து
பெரிதுசல் லாணைக் கரும்பினை யருந்தி
பெரிதுசெய் திடும்வினை யாடல்
திண்ணமிவ் வுலகி லின்னமுங் காணத்
திருவுளஞ் செய்சிவா நதிசூழ்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
சித்தநா தாந்தமே தேசிகனே, (சு)

திருக்கென நடந்தோ ரிருக்கவு மிருந்தோர்
சடக்கென நடக்கவும் நிதியோர்
தரித்திர ராக வறியவர் செல்வந்
தாழ்வுறப் புனலிலாக் குளங்கள்

பொருக்கென்ப் புனல்க ணிறைந்திடப் பெருகும்
புனற்குளம் வறண்டிடக் காய்த்துப்
பொலிமர வரிதாய்க் காய்த்திடா மரங்கள்
பூத்துமே காய்த்திடத் தளிர்த்து
விருக்கம தலர வலர்மரந் தளிர்க்க
விருப்பூறு கணவர்பாற் றுயின்றோர்
விருப்பிலா தவர்பாற் றுயின்றிட நோக்கின்
விநோதமே புரிந்திடு மெவற்றின்
றிருக்கரு ணையினிற் சிறிதுகாட் டிடுவாய்
தெளிபுனற் சுவேதமா நதிசூழ்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
சித்தநா தாந்ததே சிகனே. (எ)

தண்டமி ழுதிக்க மலர்மகள் சருவ
சற்சனர் நேயங்கள் தழுவ
தரணியா ளரச ருவகையி னழைப்பச்
சந்ததி சந்ததம் பெருக

பண்டு நான் முறைமைய நடந்திட விஞ்சை
பயின்றிடக் குருபரம் பரையே
பயிலற வியற்ற மனையறந் தழையப்
பாக்கியம் பெருகியே செல்வந்
தண்டலி னியற்றக் கருணைவா ரிதியிற்
சற்றருள் சரோருகா சண்முந்
தனிப்பலா நறையு மாவினிற் றேனுந்
தழைத்திடு கதலியின் றேனுந்
தெண்டிரை கொழித்துச் சுவேதமா நதியிற்
சேர்ந்துதண் கடலிடைப் பாயுந்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
சித்தநா தாந்ததே சிகனே. (௮)

இந்துவுஞ் சடைமேற் கங்கையுங் கரந்து
வினையிலா விழிநுதற் கரந்து
இன்னெழிற் கண்டத் திருள்விடங் கரந்து
விலங்கிய மான்மழுக் கரந்து.

சுந்தரக் கனிவா யுமையிடங் கரந்து
    துணைமுலைப் பாதுகை யிவர்ந்து
சுடர்விடு முடைக்கீழ் கோவண முடுத்துத்
    தூயபொற் பிரம்புவெண் ணீறும்
புந்தியி லியப்ப விருகரத் தேந்திப்
    பொற்சடை விரித்துநன் னுதலிற்
பொட்டுள முவப்ப வணிந்துதோ லாடைப்
    போக்கியே கற்றுகில் போர்த்துச்
சிந்துவி லுதிக்குந் தினகர னென்னத்
    தெரிசன மருணிவா நதிசூழ்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
    சித்தநா தாந்தமே சிகனே. (௧)

ஆரண முடிவி னடமிடுஞ் சுடரே
    வருட்கனி யேவரு ளமுதே
அகிலமும் பிலமும் வானமு முலாவு
    மருந்தவச் சோதியே யணிசேர்

காரண குருவே நின்றெரி சனங்கள்
கண்டிட வந்துநின் வாக்காற்
கருணைகூர்ந் ததனா லடியனேன் வந்து
கடிமணஞ் செய்யுநாட் குறித்து
ஊரினங் கிடுநாள் புயல்சொரிந் திடுத
லோய்விலை யுனதரு ளதனால்
உண்மையா யின்று தொட்டுநன் மணஞ்செய்
துன்பாதந் தெரிசனங் காணச்
சேரும்நாள் வரையிற் புயல்சொரி யாமற்
றிருவுளஞ் செய்நிவா நதிசூழ்
திசைபுகழ் குகையூ ரிசைபெற மருவுஞ்
சித்தநா தாந்ததே சிகனே. (௰)

முற்றும்.

உ

சிவமயம்.

கூகையூர்

# ஸ்ரீமத் சித்தநாதசுவாமிகள் பதிகம், விநாயகர் சோடசக்குறள் வெண்பா.

இஃது

பசும்பலூர்

சி. முத்துச்சாமி உபாத்தியாயரவர்களால்

தோத்தரிக்கப்பட்டதை

பாதாங்கி உபாத்தியாயர்

கு. முத்துசாமி உடையார் அவர்களால்

கூகையூர்

மேலவீட்டம் சு. சித்தநாதய்யரவர்கள்

பொருளுதவியால்

சிதம்பரம்

ஸ்ரீகுஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.



பிரகன்னுதீஸ்வரர்



பெரியநாயகிஅம்மை.

உ

ஸர்வம் சிவமயம்.

ஸ்ரீமத் அகண்ட காரணனுன பரமாத்மாவானவ ரால் அருளிச்செய்யப்பட்ட அகிலாண்டகோடி பிர்ம் மாண்ட உலகங்களில் மிகவும் மகிமையுள்ளதாயும், தர்மார்த்த காம்ய மோக்ஷ சதுர்வித புருஷார்த்தங்க ளையும்புரியஹேதுவாயுமுள்ள இப்பூவுலகின்கண்ஏழு வகைத் தீவிலும் மிக்க மேம்பாடுடையதான மஹா மேருகிரிக்குத் தெக்ஷண பாரிஸமாயுள்ள. ஜம்புத் தீவின்கண் விளங்கும் பரதக் கண்டத்தில் கங்கை, காவேரி மத்திபப் பிரதேசமான மஹதநாட்டின்கண் நீர்வளம், நிலவளம், வன்வளம், மலைவளம் முதலிய வற்ருல் மிகவும் சிறப்புற்ருெப்பிகந்ததாயும், அதனுல் மலைபடுதிரவியம், கான்படுதிரவியம், நாடுபடுதிரவி யம், நகர்படுதிரவியம் முதலியவற்ருல் அதிகமும் சிற ப்புற்றதாயும். தாணியிற் சிறக்கும் இரணியவுலக விரணிய முனிவனுனிரணய முற்று நணியும் பூஜிக்கப் பட்டதனுலும் சுவர்ணபுரியென்றும், ஸ்ரீமத் திருநா

வுக்கரசு சுவாமிகளாலருளிச் செய்யப்பட்ட க்ஷேத்தி ரக்கோவை யென்னும் நூலில் கூழையூரென்று துதி க்கப்பட்டதனால் கூழையூரென்றும் சித்தநாதரானவர் குகையின்கண் வசித்தன்பர்கட்கனுக்கிரகித்ததினால் குகையூரென்றும் காரண நாமதேயமுற்று ஒளிரும் நகரத்தின்கண் சத்தியம், தானம், க்ஷமம், சீலம், பொறை, அன்பு, அந்தணர் வழிபாடு, ஓதலினுவப்பு, அரனடிதொழுமவா அடியர்வழிபடு மகத்துறுங்குண வாளனாகிய மாலாங்கமஹாராஜாவென்னும் அரசன் செங்கோலோச்சி மங்காதுலகம் கங்காதரனார் தங்கா தரவால் சிங்காசனமூர்ந்தங்காவிறைபோலுலகம் புரக் கும் நாளில் தனக்குப் புத்திரப்பேறின்மையினிமித் தம் அறச்சாலை முதலிய ஆறைந்திரண்டறங்களும், இரண்யதானமுதலிய வீரெண்தானங்களும் நாடோ றும் வழுவாதியற்றி தான்வாழும்பதியின்கண்ணுள்ள சுவர்ன்னபூரீஸ்வரருடைய திருவாலயத்தைப் புதுப் பித்துத் திருப்பணி நடத்திவரும்நாளில் ஆலயப்பணி யாளனாகிய சிற்பர்களுக்கிறையோனாகும் தலைமைச் சிற்பனின் தனயன் கரந்தொழுகும் அரவந்தொட்டு

யிர்துறந்தனஞ்கி இறந்தவரையு மிடுகாட்டையுந் தருணம் மேற்றிசையின்கண்ணுள்ள அறனூற்றுமலையில் அடியர்சூழாமணிவர்க்கு மாத்மார்த்த நித்திய சைதன்ய சகசானுபவ அங்கலிங்க சிவாத்வைத உபதேச வுண்மைநிலையை அனுக்கிரகித்துக்கொண்டுறுநாளில் ஓர்நாள் ஓர்அருச்சுனப் பொதும்பரைக் கண்ணுற்றனும் இஃதரன் முடியன்கணுள்ளதென ஆகித்தமாத்திரத்திற்றானே அதனோடொழுகுங் கங்காநதியும் பாதாலவுலகிருந்து சுனைபோல் வெளிவரவும் அவண் சின்னாளூற்றுப் பிறகு அதன்கீழ்பாலுள்ள அடியவர்கட்கும் திருவருட்பாலிக்கத் திருவுளங் கொண்டெழுந்தருளுங்கால் சுனையின்கண்ணுள்ளகெங்காபவானி எற்கென்றொழி லெனவினவ என்னுடன் நீயும் வாவென்றதனால் நிவாநதி யென்றும் வெள்ளெருக்கின்கீழ் தோன்றியதனால் வெள்ளாறென்றும்நாமதேயமுற்றுப் பின்றொடர்ந்துவர இச்சுவர்னபுரிக்குத் தக்ஷணமாதிரத்துற்றதோர் உத்தியான வனத்தின்கண்ணுள்ள குகையினிடம் சித்தநாதர் வசிக்கத் திருவுளங்கொண்டு அறுகணைந்த வாற்றை இம்மடுவிற்றங்கிப்பின்

---

அர்ச்சுனப்பொதும்பர்—வெள்ளெருக்கம்புதர்

உலகோருய்தற்பொருட்டு வணகேதன்னுறங்கு முவ
ரியிற் சென்றிருவெனவிடைவிடுத்து தான்குகையின்
கண் சகலானுபவ நிஷ்டையைப்பொருந்தினவராயுறு
ங்கால் தனதருளுலகிற் பிரகாசிக்கு நிமித்தம் அச்சி
ற்பக் குழுவினரைக்கூய் தமதிருவருட் பிரசாதத்தின்
மகிமையினால் அரவந்தீண்டிக் கரந்துறுமுயிரையக்க
ணமே காத்திரத்தின் கண்ணேர்த்தியதாய்த் தோத்தி
ரஞ்செய்யும் வார்த்தையுடனஞ்சலியஸ்தனாய் எழுந்த
ருளிவரக்கண்டதும் உடனே அச்சிற்பர்களும் அங்கு
ற்றனைவர்களுமதிசயமுற்று ஓடோடியுமரசனுக்குண
ர்த்தினர். அச்செய்தியுணர்ந்து அந்நகர்க்கிறையோனா
கும் மாலாங்க மகாராஜனும் அகம்நிறைந்த வானந்த
பரவசத்தனாய் மிக்க வவசரத்தினனாகி சித்தநாதர்
தெரிசனமுற்று மகிழ்ந்திருந்தனன். சின்னாளில் சித்
தநாதர் அவ்வரசனது நற்குண நற்செய்கைகளையும்
அதிதீவிரதரபக்குவத்தையுமுணர்ந்து உடனே அங்க
லிங்க சாதன வனுபூதியையுணர்த்தி அரசனுக்குமவ்
வரசனுடைய பத்தினிக்கும் சடஸ்தல நிராபார வீர
சைவசமயாசார தீக்ஷையைச் செய்வித்து ஒழுகும்

நாளில் ஒருநாள் அரசனுடைய வயோதிகதிசையை யும் புத்திரப்பேறின்மையுங் கருதி நீங்கள் சிறிதுகாலம் இல்வாழ்க்கை யெய்திப் பின்னர் சகஜானுபவ நிஷ்டையைப்புரிக வென்றனுக்கிரகிக்க அவ்வரசனுடைய பத்தினியார் வயோதிகதிசையில் வழங்காக் கிரகஸ்தாச்சிரமக் கொள்கையை மனமொவ்வாதிறையோனுக்கு நயனபாஷையினலறிவிக்க அஃதுணர்ந்த சித்தநாதர் உடனே அவ்விருவரையும் பதினெட்டும் பதினறும் வயதுள்ள பாலியர்களாக்கி இனி இல்வாழ்க்கையைத் தடையறப் புனைபலாமென்றருளி அரசனை நோக்கி இனி உலகுக்குத் தேகபயமில்லாமல் காப்பதுடன் மனோபயமுமில்லாமல் காக்கும் காரணமாகிய அங்கலிங்க சாதனதீக்ஷையும் செய்துக்கொண்டிருவென்று ஆக்ஞாபித்துக் குகையின்கண் எழுந்தருளி ஆத்மார்த்த சகசானுபவ நிஷ்டையிலிருந்தனர்.

இப்படியிருக்கும் நாளில் ஓர்நாள் தெக்ஷணதிசையில் காவேரி தீரத்தோரூரில் வசிக்கும் ஒருவன் முன்னட்புரியு மின்னச் செய்கையாற் பின்னுளடையுங்

கொன்னுக்குறியாங் குஷ்ட ரோகத்தினல் நனியும் வாட்டமுற்று பூப்பிரதட்சணம்புரிந்து ஒழுகும்நாளில் இத்தலமுற்றதும் பிணியதிகம்நணுகி இன்பமதற்றுத் துன்புறுமமயம் அவன் இனி உயிர்வழாது துறந்து விடவேண்டுமென்றெண்ணி சித்தநாதர் நிஷ்டைபுரியுங் குகைக்கண்ணருகாமையுள்ளதோர் •நிவாநதிமடுவில் திடீரென விழுந்தனன். உடனே சித்தநாதருடைய திருவருண்மகிமையினல் குஷ்டரோக முற்றுமொழிந்து கஷ்டம் நீங்கி இஷ்டமடைந்த அஷ்டயிஸ்வரிய சாதனனுய்க் கரையேறி புணர்ந்தபாபமெலாம் பரிபூரணமுணர்ந்த ஞானிவிழிபட வோடுமே என்றதைக்கருதி இவ்விடத்தில் யாரோ பெரியவர்கள் வசிக்கின்றார்களெனத் தேடலாயினன்.

குகையின்கண்ணுள்ள சித்தநாதரைக்கண்டு மனமொழிமெய்களால் பலகாலும் வந்தித்துபதேசம்பெற்றுப் பெருமகிழ்வெய்தியிருந்தனன்.

கடந்த சாலிவாகனசக: 1772ல் நிகழும் சாதாரண்வருஷத்தில் கீழ்த்திசையின்கண்ணுள்ள விருத்த

சைலத்திற்குந் தென்மேற்றிசையில்சுமார் ஐங்கடிகை தூரத்திலுறும் சப்தகூடல் என்னும் பதியினராயும் வீரசைவ குலதிலகராயுமுள்ள ஓர்கவிவாணரானவர் தனதிளையோனுக்கு, விவாகமுடித்தற்பொருட்டுமேற்றிசையில்வீரகனூரின்கண்ணுள்ளதோர்வதுவையைக் கன்னிகாதானம், பாணிக்கிரஹணம் பெறும்பொருட்டு, முகூர்த்ததினத்தின் முன்னாள் பணிதிபண்டாரங்களுடன் இக்குகையூர் குறுகியிருநாள் கழிதலும் வைகறையில் மேற்றிசையில் மழை முகிலதிகரித்து நீத்தம் பெருக்குற்றிருகரையும் பிறழ்ந்து மாலையம்போதுவரையிலொழியாதிருப்பது கண்ணுற்று சஞ்சலசித்தராய் சித்தநாதர் சந்நிதியடைந்து நித்தியகன்மானுஷ்டானங்களை வழுவாதியற்றி சித்தநாதர் பதிகம்பாடித் துதித்து நிற்கவும் அசரீரியாக இன்னும் சின்னாழிகையில் ஆறுவழிவிடும் நீ தயாராகுக என்ற வசனங்கேட்டு பரமானந்த முற்றவராய் மனமொழி மெய்களால் பலவாறு துதித்துப்பாடியாடி நதியிழிந்து கரையேறி யிரவேசென்று மணமுடித்துப் பெருமகிழ்வெய்தினர். அவராற் கூறிய கதாசெய்யுள்

## ஶ்ரீமத் சித்தநாதசுவாமிகள் திவ்யசரிதம்.

### ஆசிரிய விருத்தம்.

புகழ்தரு சாதா ருண வருடத்திற்
        போற்று மைப் பசி மதி யாறிற்
பூரண திதியி லிரவிலேங் கடிகைப்
        பொருந்துநாட் சயனமே லுறக்கம்
நிகழ்தரு காலை வீரக லூரில்
        நிறைநகையி லாசநா தய்யர்
நிகரில்மென் புதல்வன் சுப்பரா மையர்
        நிகரில்சத் புத்திரி கன்னே
மகிழுமென் றம்பிக் களிப்பனென் றிடுசொன்
        மறுக்கமே னென நினைந் திடுங்கால்
வளர்சடை நிலத்திற் புரண்டிட விபூதி
        மருவிட நுதலிற்செம் பொட்டுந்
திகழ்திரு நீற்றுப் பையும்பொற் பிரம்புஞ்
        சிவகரப் பாதுகைப் பதமும்
சிறக்கவந் துரைத்த வுரைவழா தென்ற
        செய்யவா சித்தகே சிகனே.

இப்பேர்ப்பட்ட மகிமைவாய்ந்த சித்தநாதசுவாமியை யாவரும் வணங்கித் தெரிசித்து இகபரவின்பங்களை யனுபவிப்பீர்களாக. சுபம்.

உ

ஸர்வம் சிவமயம்.

குகையூர்

# சித்தநாதர் பதிகம்.

காப்பு.

வெண்பா.

சுத்தமெலா நல்குஞ் சுவேத நதிதீரச்
சித்தநா தேந்திரனார்ச் சீரடியைப்—பத்தியாய்த்
தோத்தரித்துப் பாடச் சுகமருளும் யானைமுக
மூர்த்திபதம் வேண்டினேன் முன்.

முருகர் துதி.

குகையுடையோ ரேற்றுங் குஞ்சரிதன் பாகா,
குகைநகர மூருங் குருவின்—விகசிதமாம்

பாதாம் புயத்தைப் பராவித் துதிக்க வரந்
தாதா வெனக்குன் ஜயம்.

## சமயதேவர் துதி.

பரஞ்சுடர் வடிவைப் பவளவார் சடையெம்
பசுவனைப் பருப்பதப் புதல்வி
தரம்படு பதத்தை தக்கவர்க் குதவுந்
தந்திமா முகத்தனைத் தருவர்
சிரம்பட வருளுஞ் செந்தில்வே லவனைச்
சிவப்பிர காசமாய் விளங்குந்
திரம்படு துறைசை சற்குரு பதத்தைத்
தினந்தினம் நினைந்துகை தொழுவாம்.

## ஸ்தலதேவர் துதி.

நித்திய நிரஞ்சன் நிராமயம தாகியொளிர்
நின்மலா னந்த வாரி
நெடும்புன றடுத்துத் தொழும்புறு மகத்தடியர்
நினைவதனி லாட்டு.விக்கும்

சித்தியொடு புத்திமக ணத்தியிடு வத்திமுக
சிற்பரவ னைத்தொழு வதாம்
தித்தியென நித்தமிடு சுத்தமயில் கர்த்தனையுஞ்
செஞ்சுடர்ப் பஞ்ச வரியாம்
சத்தியொடு சத்தனையு முத்தலைகொள் சித்தனையுஞ்
சனகர்முத லிருடி கட்குச்
சலனமற நலனருள்செய் வடதரும மடியிலுற்ற
தக்ஷிணக் கடவு ளடியும்
புத்தியொடு தத்தையடி கத்திபுரி யுத்தமனை
சித்தர்துதி முற்று மருள
புண்பநதி நண்ணியிடு சொன்னபுரி தன்னினிக
முண்ணினைவி னுன்னி யிடுவாம்.

## நூல்.

### ஆசிரிய விருத்தம்

பொன்மலை யதுவும் வளைசிலை வடிவாம்
புதுமையும் புணரியிற் பிறக்கும்
கொன்கரை யதுவு மின்சுவை யமுதாங்
கொள்கையுங் குழவியின் சிறுவாய்

இன்சுவைச் சலதி யளித்தநும் புவியி
லெளியனே னெண்ணுமா றுளதோ
சின்மய வுருவே குகைநகர் மேவுஞ்
சித்தநா தேந்திரச் சிவமே. (௧)

சத்திய ரோடு சதோதக வாதி
தற்பர வநாதியாம் நாதர்
வத்துவை யுணரும் வகுளியர் மதங்கர்
வளருடு கடேந்திர நாதர்
எத்திசை புகழுங் கோரக்க நாத
ரென்றிடுஞ் சித்தர்க டுதிக்கச்
சித்திக ளருளுங் குகைநகர் மேவுஞ்
சித்தநா தேந்திரச் சிவமே. (௨)

குடகுறுங் கிரிவாய்க் குறுகிடு மடியார்க்
குறையிருட் களைந்துநின் னருளாந்
தடவெயில் நிலையைத் தந்ததின் கீழ்பால்
தங்கிடு மடியவ ருய்யக்
கடமுடைக் களிறு வசைத்திடுங் கொம்பிற்
கவிகள்பாய்ந் துதிர்த்திடு மதுவின்

திடமுறும் நீத்த வெண்ணதிக் குகையூர்ச்
சித்தநா தேந்திரச் சிவமே. (௩)

அகமதி லன்றிப் புறமதி னிதமு
மழிவிலாச் சின்மய வுருவை
யிகபர வின்ப மெய்திடச் சயமா
மெழின்மறைக் கண்டிகை விசிதஞ்
சுகமுள விலிங்கந் துவர்நிற வுடையாய்த்
தோன்றிநற் கதியளித் தருளுஞ்
செகம்புகழ் நதிசேர் குகைநகர் மேவுஞ்
சித்தநா தேந்திரச் சிவமே. (௪)

செற்பமே முதலாஞ் சுற்றரண் வரையிற்
கிளர்மணி யோவிய மனைக்குஞ்
சிற்பனின் சிறுவன் பணியதின் கறையால்
சிற்றுயிர் துறந்தன னவனை
யற்பமென் றெண்ணி யமைதிசெய் வமய
மனுகினன் மகவுரு வாக்குஞ்
சிற்பர வுருவே குகைநகர் மேவுஞ்
சித்தநா தேந்திரச் சிவமே. (௫)

## சித்தநாதர் பதிகம்.

சைவநற் சமய மதிலுறுந் தெய்வந்
தனிச்சிவ மென்பதை யந்த
மைதவ மிகழு மலர்முடி மாலாங்
கதனெனு மரசனுக் குணர்த்தி
மெய்மொழி மனமா மூன்றினு மிலிங்க
மெய்திடும் பதமளித் திருளீர்த்
தெய்வநல் லுருவே குகைநகர் மேவுஞ்
சித்தநா தேந்திரச் சிவமே. (௬)

இல்லறம் புனைய விசைவுறுப் பருவ
மெய்திடு மிறையுட னவன்றன்
நல்லறம் புனையு மனையுடன் பருவம்
நண்ணிடு மெண்ணிரண்டாகத்
துல்லிய வீர சைவசித் தாந்தத்
துறையதை யடியவர்க் கருளிச்
செல்லல்க ணீக்கத் திருவருட் செய்த
சித்தநா தேந்திரச் சிவமே. (௭)

தக்சண வம்பர் குட்டனொருவன்
றன்வினை வலியினா லுடலே

யிக்கணம் வெறுத்து விடுவனென் றெண்ணி
யிசைபுகழ் வெண்ணதிக் குடையும்
அக்கண மவன்றன் வினைவலி தொலைய
வருணனி சுரந்திடு மருமை
செக்கணர் பரவுங் குகைநகர் மேவுஞ்
சித்தநா தேந்திரச் சிவமே. (அ)

பலகலை யுணருங் குணதிசைக் கவிஞன்
பருமண முடித்திட வெண்ணி
நலமுறு நினது பதியதை நண்ண
நதிப்புனன் மறுத்திட வெருண்டு
சலமுறு மனதாய் நின்னடி பரவத்
தண்ணதி வழிவிட வருள்செய்
சிலைநுதன் மடவா ணடித்துறுங் குகையூர்
சித்தநா தேந்திரச் சிவமே (௯)

எவ்வகைச் சமய மதனிலும் வீர
சைவமே யதிகமென் றுணர்ந்து
கைம்மல ரதனில் நிட்கள சகளக்
கடவுளை யனுதினந் துதித்து

செவ்வழி யடியர் தமக்கமு தருத்துந்
திறனுறும் வரமதை யருள்வாய்
திவ்வியர் புகழுங் குகைநகர் மேவுஞ்
சித்தநா தேந்திரச் சிவமே. (ய)

முற்றும்.

---

உ

கணபதிதுணை.

# விநாயகர்சோடசக்குறள்வெண்பா

கந்தமதத் தந்திமுகக் கந்தனருட் டாமரைகட்
சிந்தையதிற் சந்ததமுஞ் சேர். (க)

தத்துவர்க ணத்தியிடு வத்திமுக வுத்தமனைச்
சித்தியுறப் புத்திபதிற் சேர். (உ)

திங்கணுதற் கங்கைசுத னெங்கரனற் றுங்கபத
மிங்கிதமா மங்கமுற வேல். (௩)

அஞ்செவிய னஞ்சுமுக னம்மையருட் குஞ்சரனற்
கஞ்சமலர்ச் செஞ்சரணங் காண். (௪)

சர்க்கரையு முக்கனியு மிக்கபுசி முக்கணுறு
கைக்களிறை யித்ததியிற் காண். (௫)

சித்தியொடு புத்திமக ளத்தியிபி வத்திமுகப்
புத்தமுதை சித்தமதிற் பூண். (௬)

அப்பளமு முப்பழமுங் கப்பியிடு தொப்பைவயி
றப்புதனை யிப்பொழுதே யாள். (௭)

புறத்தன்மை யீர்த்துப் புகழ்முகனே சால
அறத்தன்மை யெற்கிங் கருள் (௮)

அருளதனை யேயும் வரிமருக வெற்குப்
பொருளதனை யிங்ஙன் புனை. (௯)

அன்பர் குழுசூழு மத்தி முகசுத்த
இன்பமதை யெற்கிங் கிசை. (௰)

## ஸ்ரீ விநாயகர் சோடசக்குறள் வெண்பா.

தோடலரும் ஞானத் துதிக்கை யுறுத்த
வீடதனை யெற்கு விடு. (௰௧)

தாழு மடியனிருள் தானகற்றி யோர்நிலையை
வேழ முகனே விளம்பு. (௰௨)

நிஜங்கள் பலவருளி நித்தியமா யோங்குங்
கஜமுகனே விங்ஙனெனைக் கா. (௰௩)

பானை வயிறும் பழுத்த குணமு முள்
யானைமுகா வென்றனையு மாள் (௰௪)

கங்கு லிருட்டோன்று காரானை மாமுகத்து
அங்குசனே யென்றனையு மாள். (௰௫)

முன்னை வினையகற்று முக்கண்ணனே யானைமுகா
யென்னையுமே காக்க விசை. (௰௬)

முற்றும்.